சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.126/2024**

வாதி தரப்பு சாட்சி வா.சா.4 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. K. ரெஜினா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. கோபு | த/பெ: ராமலிங்கம் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 27.01.2026 | |

முதல் விசாரணை...

நான் இவ்வழக்கில் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் தான் வரைவு செய்தேன். வா.சா.ஆ.1 ஆவணத்தை 01.02.2021ல் எனது அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு சாட்சிகள் இருவரும் எங்கள் அலுவலகத்தில் முன்பு சாட்சி கையொப்பம் போட்டார்கள். சாட்சி தற்போது சார்பதிவாளர் முன்னிலையில் கையெபத்து போட்டதாக கூறுகிறார். 1வது சாட்சி கையொப்பம் மதியழகன் போட்டதாகவும் 2 வது கையொப்பம் ஜீனத்பீவி போட்டதாகவும் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்த போது சாட்சிகள் இருவரும் நேரடியாக வந்தார்கள். சாட்சிகள் இருவரும் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்கள். வாதி, பிரதிவாதிகள் வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்து பார்த்துவிட்டுதான் கையொப்பம் போட்டார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளவாறு பிரதிவாதி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியும் அவரின் கணவரும் எனது நண்பர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.